(Under Section.173 BNSS)

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102179

1. District : Coimbatore
மாவட்டம்

PS: vigilance and Anti corruption coimbatore
காவல்நிலையம்

Year:
ஆண்டு

FIR No.: 05/2025/AC/CB
மு.த.அ. எண்

Date: 14.3.2025
நாள்

2. (i) Act சட்டம்: prevention of corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7 (a)

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்

Date from : 10.3.2025 at about 12.30 hrs.
நாள் முதல்

Date to : 13.3.2025 at about 11.15 hrs.
நாள் வரை

Time Period :
நேர அளவு

Time from :
நேரம் முதல்

Time to :
நேரம் வரை

(b) Information Received at PS. Date : 14.3.2025
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்

Time : 15.00 h.
நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 14.3.2025
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

Time : 15.00 hrs.
நேரம்

4. Type of Information : Written/ Oral : written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: VAO office, mathuvarayapuram village, perur Taluk coimbatore about 28 kms west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number :
முறைக் காவல் எண்

(b) Address :
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்

District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Krishnasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

(b) Father's/ Husband's Name : Senniyappa Goounder
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 61
நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality :
நாட்டினம்

(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue :
வழங்கப்பட்ட நாள்

Place of Issue :
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Agriculturist
தொழில்

(g) Address : perumal koil kadu perumal koil pathi, Alandurai, coimbatore
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. vetrivel, VAO, mathuvararapuram, perur Taluk coimbatore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No. delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S [signature]

[signature] 14.3.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14.3.2025 – 16.45 hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M.Vijayalakshmi
Rank: நிலை Inspector No. எண் ..........
V&AC, Coimbatore

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2025/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி–**

இன்று 14.03.2025 ஆம் தேதி வெள்ளிகிழமை மாலை 15.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.விஜயலட்சுமி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை, ஆலாந்துறை, பெருமாள் கோவில் பதி, பெருமாள் கோவில் காட்டில் வசிக்கும் சென்னியப்ப கவுண்டர் என்பவரது மகன் S.கிருஷ்ணசாமி என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புநர் S.கிருஷ்ணசாமி, வயது 61, த/பெ.சென்னியப்ப கவுண்டர், பெருமாள் கோவில் காடு, பெருமாள் கோவில் பதி, ஆலாந்துறை, கோவை, பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. ஐயா, நான் கோவை, ஆலாந்துறை, பெருமாள் கோவில் பதி, பெருமாள் கோவில் காட்டில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது மாமனார் பெயர் கிருஷ்ணசாமி கவுண்டர். அவரது இரண்டாவது மனைவி மாராத்தாள் என்பவரின் மகள் நீலாவதி என்பவரை நான் திருமணம் செய்துள்ளேன். எனது மாமனாரின் முதல் மனைவி கருப்பாத்தாள் என்பவருக்கு சுப்பிரமணி, சண்முகம் என்ற இரண்டு மகன்களும், தெய்வாணை என்ற மகளும் உள்ளன. கருப்பாத்தாள் கடந்த 1972 ஆம் ஆண்டு காலமாகிவிட்டார். எனது மாமனார் கிருஷ்ணசாமி கவுண்டர் கடந்த 25.03.2020 ஆம் தேதி இறந்து விட்டார். அவரது வாரிசு சான்றிதழ் கேட்டு எனது மாமியார் மாராத்தாள் பெயரில் இக்கரை போலுவாம்பட்டியில் உள்ள இ–சேவை மூலம் கடந்த 31.07.2024 ஆம் தேதி விண்ணப்பம் செய்தோம். மேற்படி விண்ணப்பமானது, எனது மாமனாருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதாகவும், அதற்கான ஆவணங்கள் சரியாக இணைக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டிருந்தது. அதனால் நாங்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் மாராத்தாள் பெயரில் W.P.No.37582/2024-ன்படி வழக்கு தொடுத்தோம். மேற்படி வழக்கில் கடந்த 09.01.2025 ஆம் தேதி உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவில் பேரூர் தாலூக்கா தாசில்தார் அவர்கள் மாராத்தாள் அவர்களின் மனுவை பரிசீலித்து இரண்டு வாரத்திற்குள் வாரிசு சான்றிதழ் வழங்க ஆணையிடப்பட்டது. அது தொடர்பாக கடந்த 04.03.2025 ஆம் தேதி எனது மாமியார் மாராத்தாள் சார்பில் நானும், எனது மாப்பிள்ளை ராஜசேகரனும் பேரூர் தாலூக்கா அலுவலகம் சென்று வட்டாச்சியர் அவர்களிடம் நீதிமன்ற வழங்கிய உத்தரவை காண்பித்தோம். அதற்கு அவர் ஆன் லைன் மூலம் விண்ணப்பித்து விட்டு, மத்வராயபுரம் கிராம வி.ஏ.ஓ அவர்களை நேரில் சென்று பார்க்க சொன்னார். அதன்படி நாங்களும் அன்றைய தினமே மாராத்தாள் சார்பில் அவரது

பெயரில் இ–சேவை மையம் மூலம் விண்ணப்பித்து விட்டு, மறுநாள் 05.03.2025 ஆம் தேதி மத்வராயபுரம் கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ வெற்றிவேல் என்பவரை அன்று மதியம் சுமார் 02.00 மணிக்கு நேரில் சந்தித்து மேற்படி விண்ணப்பம் தொடர்பான ஆவணங்களை அவரிடம் கொடுத்தோம். அவர் அதனை பார்த்து விட்டு பின்னர் கூப்பிடுவதாக கூறினார். பின்பு கடந்த 10.03.2025 ஆம் தேதி கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்து மாராத்தாள் செல்போன் நெம்பர் 9688236157 க்கு போன் செய்து வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக அலுவலகம் வந்து பார்க்க சொன்னார்கள். எனக்கு கொஞ்சம் வேலை இருந்ததால் என் மாப்பிள்ளை ராஜசேகரனை மத்வராயபுரம் கிராம நிர்வாக அலுலவகம் சென்று வி.ஏ.ஓ அவர்களை நேரில் பார்க்க சொன்னேன். அவரும் வி.ஏ.ஓ வை அன்று மதியம் சுமார் 12.30 மணிக்கு பார்த்து விட்டு வந்து என்னிடம் வி.ஏ.ஓ வெற்றிவேல் அவர்கள் மாராத்தாள் பெயரில் உள்ள விண்ணப்பத்தை பரிந்துரை செய்து விடுகிறேன் என்று கூறியதாகவும், அதற்கு பணம் ரூ.5,000/– வேண்டும் என்று கேட்டதாகவும், அப்போது மாப்பிள்ளை அவரிடம் அவ்வளவு பணம் இல்லை ரூபாய் 1,000/– மட்டும் தான் உள்ளது என்று சொன்னதாகவும், வி.ஏ.ஓ அவர்கள் அந்த பணம் ரூ.1,000/– ஐ கேட்டு வாங்கிகொண்டு மீதி பணம் ரூ.4,000/– ஐ மறுநாள் 11.03.2025 ஆம் தேதி வந்து கொடுக்குமாறும் கூறியதாகவும் என்னிடம் தெரிவித்தார். நான் இது சம்மந்தாக எனது மாமியார் மாராத்தாளிடம் சொன்ன போது அவர் அவ்வளவு பணம் தற்போது எப்படி கொடுக்கமுடியும், எதாவது குறைக்க முடியுமா என்று கேட்க சொன்னார். இதனால் மறுநாள் 11.03.2025 நானும், எனது மாப்பிள்ளை ராஜசேகரனும் மதியம் சுமார் 03.00 மணிக்கு கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ வெற்றிவேல் அவர்களை மீண்டும் சந்தித்து அவர் கேட்டிருந்த பணத்தை குறைக்க முடியுமா என்று கேட்டோம். அதற்கு அவர் நான் கேட்டதே குறைவான பணம் தான் என்றும், மீதி பணத்தை நாளைக்குள் கொண்டு வந்து தருமாறும் கூறினார். நான் மீண்டும் கெஞ்சி கேட்க சரி வேண்டுமென்றால் பணம் ரூ.500/– குறைத்துகொண்டு ரூ.3,500/– ஐ கொண்டு வந்து கொடுங்கள் என்றும், இல்லையென்றால் விண்ணப்பத்தை நிராகரித்து விடுவதாகவும் கூறினார். இதனால் நானும், எனது மாப்பிள்ளை ராஜசேகரனும் வீட்டிற்கு வந்துவிட்டோம். எனது மாமியாருக்கு மருத்துவ செலவு ஏற்பட்டதால், என்னால் வி.ஏ.ஓ கேட்ட பணத்தை ரெடிசெய்ய முடியவில்லை. இந்நிலையில் 13.03.2025 ஆம் தேதி வி.ஏ.ஓ அவர்கள் எனது மாப்பிளைக்கு போன் செய்து பணம் ரூ.3500/– என்னாச்சு என்று கேட்டதாகவும், பணம் வரவில்லை என்றால் விண்ணப்பத்தை நிராகரித்து விடபோவதாக கூறியதாக என்னிடம் தெரிவித்தார். மேலும் வி.ஏ.ஓ அவர்களின் உதவியாளர் ராமன் அவர்களும் எங்கள் இருவருக்கும் போன் செய்து வி.ஏ.ஓ அவர்களை எப்ப பார்க்க வருவீர்கள் என்று கேட்டார். எனக்கு மாமியாருக்கு மருத்துவ செலவினங்கள் அதிகமாக இருந்ததால் என்னால் வி.ஏ.ஓ கேட்ட பணத்தை ரெடி செய்ய முடியவில்லை. மேலும் இது சம்மந்தமாக எனது மாமியார் மாராத்தாளிடம் சொல்லி யோசித்து பார்த்ததில் வாரிசு சான்றிதழ் வழங்க மத்வராயபுரம் கிராம நிர்வாக அலுவலர்

கேட்கும் லஞ்ச பணத்தை கொடுக்க எங்களுக்கு விருப்பமில்லை. எனவே, வாரிசு சான்றிதழ் வழங்குவதற்கு பரிந்துரை செய்ய லஞ்சம் கேட்கும் கிராம நிர்வாக அலுவலர் வெற்றிவேல் மீது நடவடிக்கை எடுக்கும் படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/, 14-03-2025 (S.கிருஷ்ணசாமி). மேற்படி புகார் தொடர்பாக, ரகசிய விசாரணை மேற்கொண்டதில், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டு, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியாக ஒப்புதல் பெற்று இன்று 14.03.2025 ம் தேதி மாலை 15.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2025/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரி திரு.வெற்றிவேல், கிராம நிர்வாக அலுவலர், மத்வராயபுரம் கிராமம், பேரூர் தாலூகா, கோவை என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Madam, Received the complaint on 14.03.2025 at 15.00 hrs Sd/- x-x-x-x 14.03.2025 (M.VIJAYALAKSHMI), Inspector of Police, V&AC, Coimbatore. Madam, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.05/2025/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 14.03.2025 at 15.45 hrs. Sd/- x-x-x-x 14.03.2025 (M.VIJAYALAKSHMI), Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

14.3.2025

(M.விஜயலட்சுமி)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.